## தமிழ் நாடு அரசு

### பொருட்சுருக்கம்

ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம்- தமிழ் திட்டச் செயற்பாடு பற்றிய ஆய்வு மேற்கொள்ளுதல் ஆட்சிமொழித் திட்ட முன்னேற்றம் தொடர்பான குறிப்புரையினை எழுதும் பதிவேடு ஒன்றைத் துவக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை

அரசாணை நிலை எண்: 2682 நாள் 9.12.1982
2013, திருவள்ளுவர் ஆண்டு, துந்துபி கார்த்திகை 23

பார்வை

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க. எண்: இ2/00002/82
நாள் 27.1.82.

...

ஆணை:

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" எனும் மொழிக் கொள்கையை நிறைவேற்ற வழி வகுக்கும், ஆட்சிமொழித் திட்டச் செயற்பாடு குறித்து, அனைத்துத் துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்ட மற்றும் மண்டல நிலையிலுள்ள சார்நிலை அலுவலகங்களைத் தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்து வருகின்றனர். இவர்களால் ஒரு முறை ஆய்வு செய்யப்பெற்ற அலுவலகத்தை மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கையில் முந்தைய ஆய்வுக்குறிப்புகள் அவ்வலுவலகங்களில் சரிவரக் கிடைப்பதில்லை, இந்நிலையைத் தவிர்த்திட தமிழ் வளர்ச்சி இயக்குநர் கருத்துரு ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கருத்துருவை, அரசு ஆழமாக பரிசீலித்த பிறகு பின்வருமாறு ஆணை வெளியிடுகிறது.

2. ஆட்சிமொழித் திட்ட முன்னேற்றம் தொடர்பான குறிப்புரை எழுதும் பதிவேடு ஒன்றை, எல்லாத் துறைத் தலைமை அலுவலகங்களிலும் அவ்வத்துறைகளின் கீழ் இயங்கும் சார்நிலை அலுவலகங்களிலும் தொடங்கவேண்டும். இப்பதிவேடு நிலையானது. தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்களின், ஒவ்வொரு ஆய்வின்போதும் அவரவர்தம் குறிப்புகளை அப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அத்துறையின், மேலலுவலர்கள் அவ்வலுவலகங்களுக்குச் செல்லும்போதோ அல்லது பொது ஆய்வு மேற்கொள்ளும்போதோ, அவரவர்தம் தமிழ்த்திட்ட ஆய்வுக்குறிப்புகளையும் அதில் பதிவு செய்யவேண்டும். அவ்வலுவலகத் தலைவர்கள் குறைந்தது ஆறு திங்களுக்கு ஒரு முறையேனும் அப்பதிவேட்டைப் பார்வையிட்டதற்கான குறிப்பினை அப்பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும்.

3. "ஆட்சிமொழித் திட்ட முன்னேற்றம் தொடர்பான குறிப்புரைகள் பதிவேடு" இணைப்பில் உள்ளவாறு அமையும். தமிழ் நாட்டில் உள்ள அரசு

......2

அலுவலகங்கள் அனைத்திலும் பேணப்பெறவேண்டிய இப்பதிவேடு 100 பக்கங்களைக் கொண்டதாக அமைந்து துறைத் தலைவர்கள் தெரிவிக்கும் எண்ணிக்கையில் அச்சிட்டு வழங்குமாறு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. தத்தம் துறைக்குத் தேவைப்படும்பதிவேட்டின் எண்ணிக்கையைத் துறைத் தலைவர்கள் கணித்து உடனடியாக எழுதுபொருள் அச்சக இயக்குநருக்குத் தெரிவிக்குமாறு அனைத்துத்துறைத் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

5. இந்த செயல்முறை ஆணையின் அடிப்படையில் வருவாய் சிறப்பு ஆணையர் அனுப்பும் கருத்துருவின் பேரில் தலைமைச் செயலக நடைமுறை நூல் (SOM) மற்றும் மாவட்ட அலுவலக நூல் (DOM) ஆகியவற்றிற்கு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை உரிய திருத்தம் வெளியிடும்.

6. இதற்காகும் செலவினம் அரசு அச்சக செலவின சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பெறவேண்டும்.

7. இவ்வாணை போக்குவரத்துத்துறை மற்றும் நிதித்துறைகளின் அ.சா.கு. எண்கள் முறையே 52003/இ2/82-1, நாள் 30.8.82 மற்றும் 105205/கல்வி/82 நாள் 6.9.82 இலும் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

செ. ராம்தாஸ்,
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-1.
அனைத்துத் துறைத் தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.
அனைத்துச் செயலகத்துறைகள்
எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர், சென்னை-1
மாநிலக் கணக்காயவாளர், சென்னை-8
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை-9
(உரிய திருத்தம் வெளியிட)
நிதித்துறை, சென்னை-9
போக்குவரத்து (இ2) துறை சென்னை-9

/உத்தரவின்படி அனுப்பப்படுகிறது/

சுவி9.12.82

பிரிவு அலுவலர் 14/12

படிவம் 1

ஆட்சிமொழித் திட்ட முன்னேற்றம் தொடர்பான குறிப்புரைக் பதிவேடு

பிரிவின் பெயர் அலுவலரின் பெயர்

| நாள் | குறிப்புரைகளை எழுதும் அலுவலரின் பெயரும் ~~பதவியும்~~ பெயரும் | தமிழ் திட்டச் செயற்பாடு தொடர்பான குறிப்புரைகள் | | | | குறிப்புரை எழுதிய அலுவலரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | பதிவேடு பராமரிப்பதில் (எந்தெந்த பதிவேடுகள் இன்னும் ~~[illegible]~~ தமிழில் எழுதப் படவில்லை என்ற விவரம் குறிப்பிடப்படவேண்டும் | கடிதப் போக்குவரத்துக்களில் (எந்தெந்த வகைகள் இன்னும் தமிழில் எழுதப்படவில்லை என்ற விவரம் குறிப்பிடப்பட வேண்டும் ~~எ.டு.~~ நியமன ஆணைகள் எ.டு:) | பிற | பொது | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்